சுருக்கம்

அறிவிப்புகள் 2023-24 – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு - ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் கட்டப்படும் வணிக வளாகங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஐந்து சதவிகிதம் கடை ஒதுக்கீடு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.2) துறை

**அரசாணை (நிலை) எண்.82**

**நாள்: 13.06.2023.**
**சோபகிருது, வைகாசி 30,**
**திருவள்ளுவர் ஆண்டு 2054.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.277, ஊரக வளர்ச்சி (சி4) துறை, நாள் 22.11.2001.
2. 17.04.2023 அன்று மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு.
3. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் கடித ந.க.எண். 3211/பணியமர்த்தல்/ நாள்.24.04.2023.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரிடமிருந்து பெறப்பட்ட கடித எண்.26341/2023/ப.ரா.1-1, நாள் 31.05.2023.

*****

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 17.04.2023 அன்று நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது ஏனைய அறிவிப்புகளுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:

"உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் கட்டப்படும் வணிக வளாகங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஐந்து சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்படும்"

2. மேற்காணும் அறிவிப்பின் அடிப்படையில், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் மாற்றுத்திறனாளிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மாநிலம்

முழுவதும் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் கட்டப்படும் வணிக வளாகங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு குறைந்தபட்சம் ஐந்து சதவிகிதம் அல்லது மொத்த அலகுகள் இருபதுக்கு குறைவாக இருக்கும் பட்சத்தில் குறைந்தபட்சம் ஓர் அலகு ஒதுக்கீடு செய்திட வேண்டும் என அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கீழ்க்காணுமாறு தெரிவித்துள்ளார்:

(1) ஊரக உள்ளாட்சி அமைப்புகள் சொந்த வருவாய் இனங்களை (Own sources of Revenue) அதிகப்படுத்திடும் வகையில் வணிக வளாகங்களைக் கட்டி வாடகை பெற்று உள்ளாட்சி நிதி நிலையை அதிகப்படுத்திட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

(2) கட்டிமுடிக்கப்பட்ட வணிக வளாகங்களில் வாடகை / குத்தகை விடுவதற்கென அரசாணை (நிலை) எண்.277, ஊரக வளர்ச்சி (சி4) துறை, நாள் 22.11.2001-ல் ஆணை வெளியிடப்பட்டு நடைமுறையில் உள்ளது.

(3) தற்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் கட்டப்படும் வணிக வளாகங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஐந்து சதவீதம் ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பின்படி கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கலாம்.

(i) ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் கட்டப்படும் வணிக வளாகங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு குறைந்தபட்சம் ஐந்து சதவிகிதம் அல்லது மொத்த அலகுகள் இருபதுக்கு குறைவாக இருக்கும் பட்சத்தில் குறைந்தபட்சம் ஓர் அலகு மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

(ii) இது தொடர்பாக தொடர்புடைய கிராம, வட்டார மற்றும் மாவட்ட ஊராட்சியின் மாற்றுத்திறனாளியின் எண்ணிக்கைக்கேற்ப மேற்குறிப்பிடப்பட்ட ஐந்து சதவிகிதம் அல்லது மொத்த அலகுகள் இருபதுக்கு குறைவாக இருப்பின் குறைந்தபட்சம் ஓர் அல்கு ஒதுக்கீடு செய்வது குறித்து தொடர்புடைய ஊராட்சி அமைப்புகள் தீர்மானம் நிறைவேற்றிட வேண்டும்.

(iii) இப்புதிய நடைமுறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்பெறும் எதிர்வரும் குத்தகைக் காலத்தின் போது நடைமுறைக்கு கொண்டு வரலாம்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்து, அதன்படி ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் கட்டப்படும் வணிக வளாகங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு

குறைந்தபட்சம் ஐந்து சதவிகிதம் அல்லது மொத்த அலகுகள் இருபதுக்கு குறைவாக இருக்கும் பட்சத்தில் குறைந்தபட்சம் ஓர் அலகு மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்து கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு ஆணையிடப்படுகிறது:-

(i) கிராம, வட்டார மற்றும் மாவட்ட ஊராட்சியின் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப மேற்குறிப்பிடப்பட்ட ஐந்து சதவிகிதம் அல்லது மொத்த அலகுகள் இருபதுக்கு குறைவாக இருப்பின் குறைந்தபட்சம் ஓர் அலகு ஒதுக்கீடு செய்வது குறித்து தொடர்புடைய ஊராட்சி அமைப்புகள் தீர்மானம் நிறைவேற்றிட வேண்டும்.

(ii) இப்புதிய நடைமுறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்பெறும் எதிர்வரும் குத்தகைக் காலத்தின் போது நடைமுறைக்கு வரும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

முனைவர். ப. செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**

அரசு செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை 15.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
நிறுவனம், சென்னை-34.
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்,
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி
முகமைகள் (சென்னை நீங்கலாக).
மாற்றுத்திறனாளிகள் நலத்(மாதிநி.3-1) துறை, தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை -9.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர்,
சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13.6.2023
பிரிவு அலுவலர்